**<u>சார்பு நீதிமன்றம், திருவைகுண்டம்.</u>**

**நாள்** : 03.07.2026

**வழக்கு எண்** : OP.45/2023

**சாட்சி பெயர்** : திரு. மாடசாமி / PW.2

**<u>குறுக்கு விசாரணை</u>**

மனுதாரர் ஜேம்ஸ்ராணி எனக்கு அண்ணன் மகள் முறை. ஜேம்ஸ்ராணி அப்பா உடன்பிறந்தவர் அல்ல. திருமணத்தின்போது திருமண நிச்சயதார்த்தத்தில் நாங்கள் ஒன்றாக இருந்தோம். திருமண செலவு சம்மந்தமாக நடந்த பேச்சுவார்த்தை குறித்து எனக்கு தெரியாது. மாப்பிள்ளை பெண்ணுக்கு போட்ட நகைவிபரம் பற்றி எனக்கு தெரியும். மாப்பிள்ளைக்கு 2 பவுன் செயின் போட்டார்கள். எதிர்மனுதாரர் வேல்துரைக்கு பெற்றோர் இல்லை. அவர் சகோதரர்தான் திருமணத்தை நடத்தினார். மனுதாரரின் 4 சகோதரிகள் திருமணத்தில் கலந்துகொண்டார். எதிர்மனுதாரருக்கு எத்தனை சகோதர, சகோதரிகள் என்று தெரியாது. அவர்களில் யார், யார் திருமணத்திற்கு வந்தார்கள் என்று தெரியாது. ஜேம்ஸ்ராணி விவாகரத்து பரிகாரம் கேட்டு மனு தாக்கல் செய்துள்ளார். ஜேம்ஸ்ராணி, வேல்துரை பிரச்சனை சம்மந்தமாக நான் பேச்சுவார்த்தை நடத்த வாகைக்குளம் போனேன். ஜேம்ஸ்ராணி குடும்பத்திற்கும் வேல்துரை குடும்பத்திற்கும் பேச்சுவார்த்தை நடத்தும் பிரச்சனை ஏற்பட்டதா என்றால் வாக்குவாதம் ஏற்பட்டது, அடிதடி ஏற்படவில்லை. இதுசம்மந்தமாக காவல்நிலையம் புகார் கொக்க நான் போனேனா என்றால் இல்லை, பேச்சுவார்த்தை நடத்துவதற்கு நான் போகவில்லை என்றும், நான் போனதாக மனுதாரர் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ஹரிராமன், ராமன் ஆகியோர் வந்தார்கள், வேறு யாரும் வரவில்லை. ஹரிராமனை விசாரித்தால் ஜேம்ஸ்ராணி, வேல்துரை இருவருக்கும் நடந்த பிரச்சனை குறித்தும், பேச்சுவார்த்தை நடத்திய குறித்தும் சாட்சி சொல்வார் என்ாறல் சாட்சி சச்சு யோசித்துவிட்டு ஜேம்ஸ்ராணிக்கு ஹரிராமனுக்கும் பேச்சுவார்த்தை இல்லை என்கிறார். சமாதான பேச்சிவார்த்தையின் போது ஜேம்ஸ்ராணி செய்த தவறுகளை ஹரிராமன் சுட்டிகாண்பித்து சமாதானம் பேசியதால் ஜேம்ஸ்ராணிக்கும், ஹரிராமனுக்கு பேச்சுவார்த்தை இல்லை என்றால் சரியல்ல. ஜேம்ஸ்ராணியும், வேல்துரையும் அவரது சகோதரிகளும் அவதூறாக பேசியது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. வேல்துரையின் அண்ணனும், அண்ணன்

மனைவியும் ஜேம்ஸ்ராணியை கொடுமை செய்ததாக ஜேம்ஸ்ராணி காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளாரா என்றால் இல்லை. ஜேம்ஸ்ராணியை வேல்துரை வீட்டிற்குள்ளேயே வைத்து அடித்து பூட்டி இரும்பு கம்பியால் சூடு வைத்தாக சொல்வது வழக்கிற்காக சொல்லும் பொய் என்றால் சரியல்ல. வாகைக்குளத்தில் நடந்த பிரச்சனைக்கு ஜேம்ஸ்ராணி வேல்துரை மீதும் அவரது சகோதர, சகோதரிகள் மீதும், அதேபோல் வேல்துரை ஜேம்ஸ்ராணி மீதும் அவரது பெற்றோர் மீதும், அவரது சகோதர கொடுத்த புகாரின் பேரில் இரண்டு பேர் கொடுத்த புகார் நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கு நிலையில் கடந்த 6 மாதத்திற்கு முன்பு ஜேம்ஸ்ராணி அவரது வீட்டில் தனியாக இருந்தபோது வேல்துரை ஜேம்ஸ்ராணியை பார்க்க சென்றபோது வேல்துரை மீது ஜேம்ஸ்ராணி புகார் கொடுத்தார் என்றால் சரிதான், வேல்துரை ஜேம்ஸ்ராணி வீட்டிற்குபோது எல்லாம் பிரச்சனைதான் நடந்தது. வேல்துரை ஜேம்ஸ்ராணி கடந்த 2 வருடத்தில் ஒருநாள் கூட பேச முயற்சிக்க வில்லை என சொல்வது உண்மையல்ல என்றும், அவர் மனுதாருடன் பலமுறை பேச முயற்சி செய்தார் என்றால் சரியல்ல. வேல்துரை இன்றுவரை வாகைகுளத்தில் வசித்துவருகிறார் என்றால் அது எனக்கு தெரியாது. ஜேம்ஸ்ராணி தனது பொருட்களை பீரோவில் வைத்து பூட்டி சாவியை தனது கைவசம் வைத்துள்ளார் என்றால் தவறு, வேல்துரைதான் சாவியை வைத்துள்ளார். நான் சொன்னமாதிரி வேல்துரையுடன் சாவி இல்லை என்றும், ஜேம்ஸ்ராணியுடன் சாவி உள்ளது என்றால் சரியல்ல. நான் ஜேம்ஸ்ராணிக்கு நெருங்கிய உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக எதிர்மனுதாரர் ஜேம்ஸ்ராணியை அடித்து துன்புறுத்தியாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இப்பவும் எதிர்மனுதாரர் மனுதாரருடன் சேர்ந்து வாழ இருக்கிறார் என்றும், மனுதாரர்தான் அவருடன் சேர்ந்து வாழ மறுத்துவருகிறார் என்றால் சரியல்ல.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு கையெழுத்து/ கைரேகை செய்யப்பட்டது.

BARSAD BEGUM A Digitally signed by BARSAD BEGUM A

**சார்பு நீதிபதி,**
**திருவைகுண்டம்**